<u>பத்திரிக்கை செய்தி குறிப்பு</u>

**05.01.2017 காலை 11.00 மணியளவில் ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம், சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள் மற்றும் தமிழக பல்கலைக்கழகங்களின் உடற்கல்வி இயக்குநர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் திரு க. பாண்டியராஜன் அவர்கள் தலைமையேற்று கீழ்க்கண்ட ஆலோசனைகளை வழங்கினார்கள்.**

நேர்வரும் தேசிய அளவிலான போட்டிகளில் முதலிடம் பெறுவதற்கு முயற்சி மேற்கொள்ள, அனைத்து பல்கலைக்கழகங்களின் உடற்கல்வி இயக்குநர்களும் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து திறமையான விளையாட்டு வீரர்களை பள்ளியிலிருந்தே அடையாளம் கண்டு அவர்களை தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் பெறும் வகையில் பயிற்சி மற்றும் ஊக்கமளித்தல் வேண்டும்.

தமிழக வீரர்கள் 2020 ஒலிம்பிக்கில் பதக்கங்கள் பெறுவதற்கான ஆலோசனை அனைத்து பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குநர்களிடம் கேட்டறியப்பட்டது. மேலும், அரசின் அனைத்து கட்டமைப்பு வசதிகளை அனைத்து விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளும் பயன்படுத்தும் வகையில் அமைய வேண்டும். அரசின் அனைத்து உதவி மற்றும் ஊக்கத்தொகை சரியான மற்றும் திறமையான விளையாட்டு வீரர்களை சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் முதன்மைச் செயலர் / உறுப்பினர் செயலர் முனைவர். ராஜேந்திர குமார், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழக பல்கலைக்கழகங்களின் உடற்கல்வி இயக்குநர்கள், திரு. அ. சாந்தன், பொது மேலாளர் (பொ), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஒலிம்பிக்கில் பங்கு கொண்ட விளையாட்டு வல்லுநர்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள் ஆகியோர் பங்கு கொண்டனர்.

**செய்தி வெளியீடு: தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை.**